O.S 114/2022 நாள்: 20 11. 2024

PW1-தியாகராஜன் த/பெ. ராஜகோபால்

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1. இதே வழக்கு சொத்து சம்பந்தமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 98/2010 என்ற வழக்கை சரோஜா மற்றும் மாணிக்கம் அவர்களுடைய அதிகாரம் பெற்ற முகவராக நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்கூறிய வழக்கின் சான்று நகல் என்று சொன்னால் சரிதான். அந்த சான்று நகல் பி.த.சா .ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்கூறிய அசல் வழக்கு எண் 98/2010 ல் பிரதிவாதிகளால் தாக்கல் செய்த எதிர் வழக்குரை என்று சொன்னால் சரிதான். அந்த எதிர் வழக்குரை பி.த.சா. ஆ- 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் நான் இவ்வழக்கில் குறிப்பிட்ட வழக்கு சொத்திற்கு சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

2. அந்த வழக்கு தள்ளு படி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னிடம காட்டப்படும் ஆவணங்கள் அசல் வழக்கு 98/10 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்புரை பி.த.சா. ஆ. 3 ஆகவும், தீர்ப்பாணை பி.த.சா. ஆ. 4 ஆக வும் குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அந்த அசல் வழக்கிற்கு நான் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு எண் 32/2016 என்ற மேல்முறையீட்டை தாக்கல் செய்து அது நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களை தான் அசல் வழக்கு 98/10 ல் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்த வா.த.சா. ஆ- 1 இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும் அது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்ககல் செய்த வா.த.சா. ஆ. 2 என் செல்வாக்கை பயன்படுத்தி அசல் வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக பெறப்பட்ட சான்றாவணம் என்று சொன்னால் சரியல்ல.

3. இவ்வழக்கில் தாக்கல் செய்த வா.த.சா ஆ- 4 அசல் வழக்கில் ஏற்றுக் கொள்ளப்படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி, இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை அனுபவ மாற்றத்தை

செய்து கொடுத்ததாக அவர் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி, 2 மற்றும் 3 வது பிரதிவாதிகளின் நிதி உதவியுடன் தொகுப்பு வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதில் குடியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கை தாக்கல் செய்த நேரத்தில் தாவா சொத்தில கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன என்றும் அதற்காக ஆணையரை நியமித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை.

4. இவ்வழக்கில் என் சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளனே் என்று சொன்னால் சரிதான். ராஜேந்திரன் என்பவரிடமிருந்து இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் அனுமானத்தை பெற்று அதில் கட்டிடம் கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றும் அதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வா.சா. ஆ. 5 மற்றும் 6 தாவா சொத்திற்குரிய ரசீது இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் நான் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**